ශ්‍රී ලංකා ප්‍රජාතාන්ත්‍රික සමාජවාදී ජනරජයේ ගැසට් පත්‍රය

අති විශෙෂ

# இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகை

அதி விசேஷமானது

අංක 1705/26 - 2011 මැයි 12 වැනි බ්‍රහස්පතින්දා - 2011.05.12

1705/26 ஆம் இலக்கம் - 2011 ஆம் ஆண்டு மே மாதம் 12 ஆந் திகதி வியாழக்கிழமை

(அரசாங்கத்தின் அதிகாரத்துடன் பிரசுரிக்கப்பட்டது)

## பகுதி IV (அ) - மாகாண சபைகள்

### மாகாண சபை அறிவித்தல்கள்

**மேல் மாகாண அரசாங்க முகாமைத்துவ உதவியாளர்கள் சேவையின் சேவைப் பிரமாணக் குறிப்பு**

**திருத்தம் - இலக்கம் 03**

2005 ஆம் ஆண்டு மாச்சு மாதம் 23 ஆந் திகதிய 1385/10 ஆம் இலக்க இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் அதிவிசேட வர்த்தமானியில் வெளியிடப்பட்ட மேல் மாகாண அரசாங்க முகாமைத்துவ உதவியாளர்கள் சேவையின் சேவைப் பிரமாணத்தை கீழ்க் குறிப்பிட்டவாறு திருத்தியமைக்கின்றேன்.

14: 3: 4 உட்பிரிவுக்கு இறுதியில் கீழ்க் குறிப்பிடப்படும் புதிய உட்பிரிவு சேர்த்துக்கொள்ளப்பட்டுள்ளது.

(அ) 2005.03.23 ஆந் திகதிக்கு முன்னர் மேல் மாகாண அரசாங்க முகாமைத்துவ உதவியாளர்கள் சேவைக்கு இணைந்துள்ள 2012.07.01 ஆந் திகதிக்கு முன்னர் ஓய்வு பெறுவதற்காக உரித்தடையவர்களின் சேவைப் பிரமாணக் குறிப்பில் விதிக்கப்பட்டுள்ள இரண்டாம் மொழித் தேவையை பூர்த்தி செய்வதில் நின்றும் விடுவிக்கப்பட்டுள்ளனர் ;

(ஆ) ஏனையோர் 2012.07.01 ஆந் திகதிக்கு முன்னர் மேல் மாகாண அரசாங்க முகாமைத்துவ சேவையின் பிரமாணக் குறிப்பில் குறிப்பிட்டுள்ளவாறு இரண்டாம் மொழித் தேவையைப் பூர்த்தி செய்திருத்தல் வேண்டும் ;

(இ) 2012.07.01 ஆந் திகதி வரை மட்டுமே சகல மேல் மாகாண அரசாங்க முகாமைத்துவ உதவியாளர்கள் சேவை உத்தியோகத்தர்களும் இரண்டாம் மொழியின் தேவையை பூர்த்தியடையாமல் சுய சம்பள அதிகரிப்பை உழைத்துக் கொள்வதற்கும் அத்துடன் உரிய பதவி உயர்ச்சிகளைப் பெறுவதற்கும் உரிமை வழங்கப்பட வேண்டும்.

எஸ். அலவி மௌலானா,
ஆளுநர்,
மேல் மாகாணம்.

ஆளுநர் செயலாளர் அலுவலகம்,
4 ஆம் மாடி, யுனிடி பிளாஸா கட்டிடம்,
கொழும்பு 04,
2011, மே 05.

05- 668

இலங்கை அரசாங்க அச்சுத் திணைக்களத்திற் பதிப்பிக்கப்பெற்றது.